## *மாசற்ற குழந்தைகள்*

மாசற்ற குழந்தைகள் கொல்லப்பட்டதை நற்செய்தி நூலில் நாம் பார்க்கிறோம். ஏறக்குறைய நாற்பது ஆண் குழந்தைகள் கொல்லப்பட்டிருப்பார்களென சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அவர்கள் இறந்து இயேசு நம் அரசர் என சாட்சி பகர்கிறார்கள். ஏனென்றால் இயேசு யூதர்களின் அரசர் என்றபடியால் ஏரோது மன்னன் அவரைக் கொல்லத் தேடினான். கொல்லப்பட்ட குழந்தைகள் தங்கள் தேவ அரசரது புகழை வாயினால் அல்ல, ஆனால் தங்கள் சாவினால் பாடினார்கள். “ராமாவிலே கூக்குரல் கேட்டது. பேரழுகையும், ஒப்பாரியுமாக இருந்தது. ராக்கேல் தன் குழந்தைகளுக்காக அழுது கொண்டு குழந்தைகள் இல்லாமையால் ஆறுதல் பெறவிரும்பவில்லை” என்ற எரேமியாஸ் இறைவாக்கினரது சொற்களை புனித மத்தேயு நமக்கு நினைவூட்டுகிறார். யூதா, பெஞ்சமின் ஆகிய கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் பபிலோனியாவுக்கு அடிமைகளாகக் கொண்டு போகப்பட இருந்தார்கள். அவர்களை ராமா என்னும் கிராமத்தில் திரட்டிச் சேர்த்தார்கள். யூத மக்களின் முதாதையான ராக்கேல், பெத்லகேமுக்கு அருகில் இருந்த தன் கல்லறையிலிருந்து புறப்பட்டு வெளிவந்து, தன்னிடமிருந்து பறிக்கப்பட இருக்கும் தன் மக்களை நினைத்து அழுது புலம்புவதாக எரேமியாஸ் சித்தரிக்கிறார். ஏரோதுவின் ஆட்களால் கொ்லப்பட்ட குழந்தைகளின் தாய்மார் ராக்கேலைப் போல அழுததாக புனித மத்தேயு சொல்கிறார்.

இவ்விழா முதல் நூற்றாண்டிலிருந்தே கொண்டாடப்படுகிறது. இவர்கள் வேதசாட்சிகள் என புனித எரோணிமுஸ், புனித அகுஸ்தீன் சொல்கிறார்கள். இக்குழந்தைகள் உலகம், உடல், பசாசு இவற்றால் ஏற்படும் தீமைகளை அறியாமலே மோட்சமுடி பெற்றுக் கொண்டார்கள்.

**சிந்தனை:**

பொறாமையால் ஏரோது மன்னன் குற்றமற்ற குழந்தைகளைக் கொன்றான். பொறாமையால் எண்ண முடியாத தீமைகள் உலகில் நடைபெறுகின்றன.

**செபம்:**

ஆண்டவரே, பொறாமை என்னும் தீக்குணத்தை அனைவரது உள்ளங்களிலிருந்தும் அகற்றியருளும்.